# சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2009
ஐப்பசி 15
துல்ஹஃதா பிறை 29
புதன் (1-11-1978)
நிறுவியது 1947
புத்தகம் 32
இதழ் 44

விலை சதம் 35


### கூட்டணி பா.உ.க்கள் மூவரிடம் விளக்கம் கோரப்படும்!

இயக்கத்தின் கட்டுப்பாட்டை மீறும் முறையில் அண்மையில் நடந்துகொண்ட கூட்டணியின் மூன்று பா.உ.களிடம் அது பற்றி விளக்கம் கோருவதென்று யாழ்ப்பாணத்தில் 29.10.78 ஞாயிற்றுக்கிழமைநண்பகல் த.வி.கூ. தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற தலைமைச் செயற்குழுக் கூட்டத்தில் ஏகமனதாக முடிவு எடுக்கப்பட்டது. இக் கூட்டத்துக்கு த.வி.கூ. தலைவர் திரு. மு. சிவசிதம்பரம் தலைமை வகித்தார்.

# எதிர்க்கட்சிக்குப் 'பொறி' அரசு அவசர ஆலோசனை!

## இதற்கு வசதியாக அரசியல் சட்டம் திருத்தப்படலாம்!

இலங்கையில் பலமான எதிர்க்கட்சியொன்று இல்லாமற்போனது குறித்து இந்தியாவில் கவலை தெரிவித்திருப்பதன் மூலம் தம்மை தாராளமனப்பான்மை கொண்ட ஒரு பெரிய ஜனநாயகவாதியாக வெளியுலகுக்குக் காட்டிக் கொண்டிருக்கிறார் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன; ஆனால் இலங்கையிலோ அவரும் அவரது அரசும் இப்போது இருக்கும் பலம்குறைந்த எதிர்க்கட்சியைத் தானும் இல்லாதொழிப்பதற்கு திரைமறைவில் திட்டமிட்டுவருவதாக அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

அரசாங்கத்துடன் சேருவதற்கு எதிர்க்கட்சியாகிய தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த சில பா. உக்கள் விருப்பம் தெரிவித்துள்ளதாகவும் திரு.ஜே.ஆர். இந்தியாவில் அறிவித்துள்ளார். இது உண்மையோ கட்டுக்கதையோ அது வேறு விடயம்.

ஆனால் இப்போது 17 பேரைக் கொண்ட எதிர்க்கட்சியாக இன்று இருக்கும் தமிழர் விடுதலைக்கூட்டணியிலிருந்தோ அல்லது சிறீலங்கா சுதந்திரக்கட்சியிலிருந்தோ வெளியேறி அரசாங்கத்துடன் யாராவது சேரவிரும்பினுல், அவர்களுக்கு வாய்ப்பு அளிக்கக்கூடிய முறையில் அரசியல் சட்டம் திருத்தப்படலாமென்று அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

அதாவது, ஒருவர் தாம் தேர்தலில் வெற்றி பெற்ற கட்சியிலிருந்துவிலகினுலோ, அல்லது அக்கட்சியினுல் வெளியேற்றப்பட்டாலோ, பாராளுமன்ற உறுப்பினர் பதவியையும் அவர் இழந்துவிடுவதாக இப்போதைய அரசியலமைப்பு விதி கூறுகிறதல்லவா? அந்த விதியே திருத்தியமைக்கப்பட்டு, எதிர்க்கட்சியிலுள்ள பா. உக்கள் யாராவது விரும்பினுல் அரசுடன் சேருவதற்கு வாய்ப்புஏற்படுத்திக்கொடுக்கப்படவிருப்பதாகவும்,இப்படி ஒரு வாய்ப்பைஏற்படுத்திக்கொடுப்பதன் மூலம், ஆகக் குறைந்தது மூன்று பேரையாவது எதிர்க்கட்சியிலிருந்து அரசாங்கத்துக்கு இழுத்துவிடலாமென்று அரசு கருதுவதாகவும்சொல்லப்படுகிறது.

த. வி. கூ. பா. உக்கள் இருவர் அண்மையில் தெரிவித்திருந்த கூட்டணிக்கு முரண்பாடான சில கருத்துக்களையொட்டி அமைச்சரவை மட்டத்திலேயே விவாதிக்கப்பட்டதாகவும், சில முடிவுகள் எடுக்கப்பட்டதாகவும், 26-10-78 வீரகேசரி செய்தி வெளியிட்டிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

# கூட்டணியின் அரசியல் தலைமையை ஏற்றே இளைஞர் பேரவை செயற்படும்

## பொதுச்சபையின் தீர்மானங்கள்!

தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் தலைமையை தமிழ் இளைஞர் பேரவை ஏற்றுக்கொள்ளும் அதேவேளையில் இளைஞர் பேரவை தனித்துவத்துடன் இயங்குவதென்று மேற்படி பேரவையின்பொதுச்சபைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

தமிழ் இளைஞர் பேரவையின் பொதுச்சபைக்கூட்டம் 29-10-78 ஞாயிறு காலை அதன் அமைப்புச் செயலாளர் திரு. சந்ததியார் தலைமையில் கூடி நீண்டநேர விவாதத்தின் பின்னர் பின்வரும் தீர்மானங்களையெடுத்தது.

(1) மாவட்ட மந்திரி பதவியை ஏற்பது தமிழீழ விடுதலைப்போராட்டத்தைப் பின் தள்ளக்கூடியது என்பதால் அப்பதவியை கூட்டணி ஏற்றுக்கொள்ளக் கூடாது. (இதே போன்ற தீர்மானத்தை தமிழ் மகளிர் பேரவையும் எடுத்துள்ளது.)

(2) தமிழ் இளைஞர் பேரவை சிங்கள சிறீலங்கா ஆட்சியால் நடத்தப்படும் சகல தேர்தல்களையும் முற்றாக நிராகரிப்பதென ஏகமனதாகத்தீர்மானிக்கப்பட்டது.

(3) தமிழ் இளைஞர் பேரவை உறுப்பினர்கள் த.வி.கூ. உட்பட எந்தவொரு அரசியற்கட்சியிலும் உறுப்பினர்களாக இருக்க முடியாதெனவும், அப்படியிருப்பவர்கள் 1-12-78க்கு முன்னர் அதிலிருந்து விலகவேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

(4) சிறீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியில் தமிழ் இளைஞர்கள் கொடுமைப்படுத்தப்பட்ட போது அதைக் கண்டித்த த.வி.கூ. பாராளுமன்றஉறுப்பினர்கள் இன்று மௌனம் சாதிப்பதை த. இ. பேரவை கண்டிக்கிறது.

(5) எல்லைப்புற பாராளுமன்றஉறுப்பினர்களின் தமிழீழ விடுதலைக்கான வேலைகளில் தமிழ் இளைஞர் பேரவை பூரண ஒத்துழைப்பை வழங்கும்.

(6) திருமலை பாடசாலை விடயமாக தமிழ் பிரதேசங்களில் ஓர் அடையாள பகிஷ்கரிப்பு நடத்தல்.

# தமிழ் ஈழத்தில் (சிங்கள) சிறீலங்காவின் படைத்தளங்கள்!

## விடுதலைக் கிளர்ச்சியை முறியடிக்க முன்னேற்பாடு!

தமிழ் ஈழத்தைச் சட்டவிரோதமாகவும், பலாத்காரமாகவும் ஆட்சிபுரிந்து வரும் சிங்கள சிறீலங்கா, அங்கு வளர்ந்துவரும் விடுதலை உணர்ச்சியையும், எதிர்காலத்தில் நடைபெறப் போகும் விடுதலைக் கிளர்ச்சிகளையும் முறியடிப்பதற்காக தமிழ் ஈழத்தில் தனது ஆயுதப்படைத்தளங்களை விரைவாக அதிகரித்து வருகிறது.

தமிழ் ஈழத்தின் எல்லைப்புறப்பிரதேசமாகிய வவுனியாக் காட்டுக்குள் விமானத்தளம் ஒன்றை சிங்கள சிறீலங்கா அரசு சென்றவாரம் நிறுவியுள்ளது. இந்த விமானத்தளத்தில் இப்போது 20 விமானப்படை வீரர்கள் முகாமிட்டிருப்பார்கள். இந்த விமானத்தளத்தை சிறீலங்கா அரசில் அமைச்சராக இருக்கும் தமிழ்ஈழத்தவரான திரு. தேவராயகத்தைக் கொண்டே சிறீலங்கா அரசு திறக்கவைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.


இந்த விமானத்தளத்தில் பணிபுரியும் விமானப்படை வீரர்களுக்கும், ஏனைய ஊழியர்களுக்கும் இருப்பிடவசதி செய்து கொடுப்பதற்காக விமானத்தளத்திற்கு அருகே பல்லாண்டுகளாக வாழ்ந்து வரும் தமிழர்களை அங்கிருந்து பலவந்தமாக சிங்கள அரசு வெளியேற்றவுள்ளது.

திருகோணமலையிலும், யாழ்ப்பாணத்திலும் ஏற்கனவே விமானப்படைத்தளங்கள் நிறுவப்பட்டுள்ளது தெரிந்ததே.

தமிழ் ஈழத்தின் மற்றோர் முக்கிய பிரதேசமாகிய மன்னாரிலும் இராணுவ முகாம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்தமுகாமில் இராணுவ வீரர்களுக்கு துப்பாக்கியால் சுடுவதற்குப் பயிற்சி கொடுக்கப்படவிருக்கிறது. எதிர்காலத்தில் தமிழீழ விடுதலைப் போராட்டம் நடைபெறும்போது விடுதலை வீரர்களைச் சுட்டுக் கொல்வதற்குத்தான் இந்தப்பயிற்சி அளிக்கப்படுகிறதா என்ற கேள்வி எழுப்பப்படுகிறது.

இந்தத் துப்பாக்கிச் சூட்டுப்பயிற்சி முகாம் அமைப்பதற்காக, 1977 ஆவணி இனக்கலவரத்தின் போது பாதிக்கப்பட்டு, சிங்கள சிறீலங்காவிலிருந்துஅகதிகளாக ஓடிவந்து தஞ்சமடைந்த தமிழ் அகதிகள் குடியேறி தங்கள் வாழ்வை அமைத்துக் கொண்ட நிலம் பலவந்தமாகப் பறிக்கப்பட்டு, இவர்கள் துரத்தப்பட்டுள்ளனர். 'வளன்நகர்' என்று இந்த இடத்திற்குப் பெயர் சூட்டி வாழ்ந்து வந்த 150 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 500பேர் மீண்டும் சிங்கள அரசினுல் அகதிகளாக்கப்பட்டு மன்னார் மடுக் கோவிலைத் தஞ்சமடைந்துள்ளனர்.

தமிழீழம் விடுதலையடைவதற்கு எதிர்காலத்தில் நடத்தக் கூடிய கிளர்ச்சிகளை முளையிலேயே கிள்ளியெறியும் திட்டத்துடனேயே சிங்கள சிறீலங்கா ஏகாதிபத்தியம் தமிழீழத்தின் கேந்திரஸ்தானங்களில் தனது ஆயுதப்படைத்தளங்களை நிறுவி வருவதாக சொல்லப்படுகிறது.




தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவர்கள் தடுமாறினாலும்

# இளைஞர்கள் விழித்தெழுந்துவிட்டனர்!

## அவர்களை இனி ஏமாற்ற முடியாதென்கிறார் ஈழவேந்தன்



நம்பிக்கை இழக்கின்ற நிகழ்ச்சிகள் நாட்டில் நாள்தோறும் நிகழ்ந்துகொண்டிருக்கிறது. குறிப்பாக தமிழ் இளைஞர்கள் நம்பிக்கையை இழக்காமல் செயல் ஆற்ற வேண்டும். நம்பிக்கை இழந்து விட்டால் எமக்கு வாழ்வில்லை. 3ம் நூற்றாண்டு தொட்டு 6ம் நூற்றாண்டு வரை தமிழன் வாழ்வு மீண்டும் தலைதூக்கியிருப்பதற்கு வரலாற்றுச் சான்றுகள் உண்டு. ஆகவே 30 ஆண்டு சிங்களவன் ஆட்சி காரணமாக—கொடூரமான ஆட்சியாக விளங்கினும் எம் இனத்தின் வாழ்வு முடிந்து விட்டது என்று ஏங்க வேண்டியதில்லை. உள்ளத்தூய்மையோடு இயங்கினால் வெற்றி நமதே நாளை நமதே.

குறிப்பாக தமிழ் இளைஞர்கள் வெறுமனே உணர்ச்சி வயப்படாத நிலையில் வேகத்தையும் விவேகத்தையும் இணைத்து குறிக்கோளோடு வாழ பழகிக்கொள்ளவேண்டும். எப்படியும் வாழலாம் என்ற நிலையை நீக்கி இப்படித் தான் வாழவேண்டும் என்ற இலட்சியப் பற்றோடு வாழ பழகிக் கொள்ள வேண்டும்.

சிங்கப்பூர், பர்மாபோன்ற நாடுகளில தமிழர் வந்தேறு குடிகளாகவே இருக்கின்றனர் அவர்கள் உரிமைகோருவதற்கு உரித்துடையவர்கள் அல்லர். கிடைத்ததைக் கொண்டு நிறைவு பெறும் நிலையில் இருக்கிறார்கள். ஆனால் ஈழம் வாழ் தமிழ் இனம் வந்தேறு குடியும் அல்ல, கள்ளத்தோணியும் அல்ல. சிங்களவன் முன்னோர் என்று கூறப்படும் விஜயன், தாயின் கருவிலே உருவானதற்கு முன் நிலைத்த புகழோடு நீடு புகழோடு வாழ்ந்தவன் தமிழன். இதனை நடுநிலை நின்று சேர். போல் பீரிஸ்போன்றவர்கள் வரைந்துள்ள வரலாற்று நூல்களைப் புரட்டிப் பார்ப்போர் உணர்வர்.

பௌத்த சின்னங்களுக்கு கீழ் மட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள இறந்தோரின் அடக்கம் செய்யும்மட்பாண்டங்கள் சிங்களப் பண்பாட்டிற்கு மிக முந்திய நிலையில் தமிழரின் பண்பாடு நாட்டில் நிலவியது என்பதற்கு சான்றாக அமைகிறது.

தமிழர்கள் இந்நாட்டில் வாழ்ந்தவர்கள்மட்டும் அல்ல; ஆண்டவர்கள் என்பதனையும் சிங்களவர்கள் எம் ஆட்சியை என்றும் கைப்பற்றியதில்லை என்றும்-தொடர்ந்து அவர்கள்எம்மை ஆண்டதில்லை என்றும் அத்துடன் அவர்கள் எம்மை ஆள உடன்பாடு தெரிவிக்கவில்லை என்றும் நடுவர் அற்ற நீதி மன்றத்தில் திரு. திருச்செல்வம் அவர்கள் எடுத்தாண்ட வாதத்தை நினைவு படுத்தி ஆண்ட பரம்பரை மீண்டும் தன்னை ஆள்வதை எவரும் தவறென்று கூற முடியாது என்பதை தெளிவாக்கினார்.

பழைய வரலாறுஒருபுறம் போக சிங்களவரும் தமிழரும் பரம்பரை விரோதிகள் என்ற பேராசிரியர் ஹூக்வயிக் அவர்களின் கூற்று நினைவு கூரப் படவேண்டியது. 1920 இல் முதல் காலகட்டத்திலேயே தமிழ் தலைவர்களின் மூளையை—பணியை தமக்கு பயன்படுத்திய சிங்கள இனம் தமது தேவை முடிந்த பின்பு கறிவேப்பிலையின் வாசனையைப் பெற பயன்படுத்திய பின் தூக்கி எறிவதைப் போல— எறிந்துவிட்டார்கள். சேர். பொன். இராமநாதன், சேர் பொன். அருணசலம் ஆகியோர் வாழ்க்கை இத்தகைய சிங்களவர்களின் போக்குக்கு எடுத்துக் காட்டாக விளங்குகிறது.

இன்றைய சூழ்நிலையில் தமிழன் சலுகைகளுக்காக கெஞ்சுகின்ற நிலையில்—உரிமைகளுக்காக கோரி நிற்கும் நிலையில் வாழவில்லை. தன் விடுதலையை மீண்டும் நிலைநாட்டுவதற்கு இன்று தமிழன் உறுதிபூண்டு விட்டான். சில தலைவர்களின் மனம் சில வேளைகளில் பேதலித்தாலும தமிழ் இளைஞர்கள் தமது வருங்காலம் எவ்விதம் அமைய வேண்டுமென்பதில் தெளிவும் உறுதியும் பெற்றுவிட்டார்கள். அவர்களை எந்த ஒரு சக்தியும் இனி ஏமாற்ற முடியாது.

நிலப் பாதுகாப்பு அதிகாரங்களை பன்முகப் படுத்துவதற்கு எதுவித உத்தரவாதமும் அளிக்காத மாவட்ட மந்திரிப்பதவிகளில்எம்மவர் மயங்குவது தற்கொலைக் கொப்பான செயலாகும். ஜே. ஆர். உட்பட எந்தஒரு சிங்களத் தலைவரையும் தமிழ் இனம் நம்பி வாழ முடியாது.

பாகிஸ்தானை ஜின்னாகோரி நின்ற காலத்திலும் பெரும் மனம் படைத்த காந்தியை நம்பும்படி அவரிடம் வேண்டுகோள் விட்டபோது "வாதத்துக்காக காந்தி பெரிய மனிதனாக கணிக்கப் பட்டாலும் இன்று தோன்றி நாளை மறையக் கூடியதனிப்பட்ட தலைவனிடம் எனது மக்களை ஒப்படைக்க ஆயத்தமில்லை. எனது மக்களுக்கு நிலையான அரசியல் பாதுகாப்புத்தேடிக்கொடுப்பது எனது கடமை. பாகிஸ்தானை உருவாக்குவதன் மூலம் தான் அதனை நிலைநாட்ட முடியும்" என்று ஜின்னாஅன்று கூறிய கூற்றுக்கள் இன்று எமது சூழ்நிலைக்கு முற்றும்பொருத்தமான கூற்றாகும். திரு. ஜே. ஆர் அறத்தின் காவலனாக—தருமிஷ்டைவாதியாக மாறினாலும் அவரை நம்பி எம்மினத்தை அவரிடம் ஒப்படைப்பதற்கு நாம் மடையர்கள் அல்ல.

தமிழ் இனத்திற்கு ஏற்பட்டுள்ள அரசியல் நோய்க்கு ஒரே ஒரு மருந்து தமிழ்ஈழம் காண்பதே தவிர வேறு வழியில்லை.

எமது விடுதலைப்போராட்டத்தில் எல்லோருக்கும் பங்குண்டு. சிலர் தமது உயிரை மாய்க்கையில்—சிலர் சிறையில் சித்திரவதைக்குள்ளாகும் போது பலர் பார்வையாளர்களாக இருப்பார்களேயானால் விடுதலையைக் காண முடியாது. இந்த விடுதலைப் போராட்டத்தில் எல்லோரும் பங்காளர்களாக மாறி தமது அறிவு, ஆற்றல், அனுபவம், வாழ்க்கைநிலை என்பதற்கேற்ப தம் பங்கைசெலுத்த வேண்டும்.

ஐக்கிய நாடுகள் சபை வரைக்கும் எங்கள்குரல் இன்று ஒலிக்கத்தொடங்கி விட்டது. உலக நாடுகள் எமது போராட்டத்தை ஊன்றி அவதானிக்கின்றன. நாளும்பொழுதும் உலகச் செய்தியாளர்கள் எம்மை சந்தித்தபடியே இருக்கிறார்கள். இன்றில்லாவிட்டாலும் நாளை நாம் விடுதலை பெறுவதை தமிழ் ஈழம் காண்பதை எவராலும் தடுக்க முடியாத நிலை உருவாகிவருகிறது. வெற்றி நமதே, நாளை நமதே.

(அண்மையில் மட்டக்களப்பு மாநகரசபைமண்டபத்தில் மட்டக்களப்பு த.இ. பேரவையின்சார்பில் நடைபெற்ற கருத்தரங்கில் ஆற்றிய உரையின் சுருக்கம்.)

---

# கல்குடாத் தொகுதியில் தமிழ் இளைஞர்கள் வேலையின்றி அவதி

## வெளியிலிருந்து சிங்களவர்கள் குவிப்பு!

**நான்** கல்குடாத் தொகுதிக்குள் அமைந்துள்ள ஓர்சிறுகிராமத்தில்தொன்றுதொட்டு வாழ்ந்து கொண்டு வருகின்றேன். சென்ற பொதுத்தேர்தலில் நானும் இங்குள்ள இளைஞர்களும் அண்ணன் திரு. சி. சம்பந்தமூர்த்தி (த. வி. கூ.) அவர்களுக்கு வாக்களித்தோம். இதன் எதிரொலியாக இப்போது இங்குள்ள ஐ. தே. கட்சிக்காரர்கள் எல்லாவற்றிலும் தாங்களே முதன்மை பெற்றுக்கொண்டு த. வி. கூ. இளைஞர்களை தொழில் வாய்ப்பில் முன்னேற முடியாதவாறு தடை செய்கின்றனர்.

உதாரணமாக கல்குடாத் தொகுதியில் எல்லைப்பெயர் பெற்ற கல்குடாவில் அமைந்துள்ள ஹோட்டல் ஒன்றில் இங்குள்ள இளைஞர்கள் ஓரிருமா தங்கள் வேலை செய்ததும் இவர்களை ஏதோ ஒரு காரணத்தைக்காட்டி நிறுத்தி விட்டு சிங்கள இளைஞர்களை (எங்கிருந்தோ வந்த) வேலைக்கு அமர்த்துகிறார்கள் இதனால் இந்த இளைஞர்கள் பாதிப்படைகிறார்கள் ஏன்? இந்தப்பாகுபாடு! த. வி. கூட்டணிக்கு வாக்களித்து தமிழ் ஈழ விடுதலைக்கு ஒத்துழைத்ததிற்காகவா இந்த இனப்பாகுபாடு! இதற்கு உடந்தையாக சதிகாரக்கூட்டம் ஒன்று பயன்பட்டு வருவது மறைமுகமாக தெரிகிறது.

எனது இந்த ... தமிழ் இளைஞர்களே வேலைக் ... கமர்த்தி தொழில் வாய்ப்பளிக்காமல் எங்கிருந்தோ வருகின்ற சிங்கள இளைஞர்களுக்கு தொழில்வாய்ப்பளிக்கின்றார்கள் "இதுதான் தார்மீக அரசு என்பதா" இதை யாரிடம் என் போன்ற இளைஞர்கள் முறையிடுவது? இதையிட்டு இத்தொகுதி நீதி அமைச்சர் திரு. தேவநாயகம் அவர்களும் கண்மூடித்தனமாக இருக்கின்றார்.

இதனால் இங்குள்ள தமிழ் இளைஞர்கள் தொழில்வாய்ப்பின்றி கஸ்டப்படுகின்றார்கள். இதை சம்பந்தப்பட்ட எம்முடைய தமிழ் ஈழத்தலைவர்களிடம் தெரிவித்து சமவேலை வாய்ப்பைப்பெறுவதற்காக ஆவனசெய்துதரும்படி தமிழ் இளைஞர்களின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

—தமிழ் மகன்

கும்புறு மூலை வேம்பு
தமிழ் ஈழம்

---

# சேனாதிபதி எங்கள் மாவை

வெண்கலமாம் குரல் அதில் ஆவேசம் வீசும்
வீழ்ந்த தமிழ் வரலாறு பாயும் மாற
தொண்டு செய்யும் இளம் சிங்கம் சிறையில் வாழ்வு
தொடர்ந்தாலும் கலங்காமல் நாளும் போதும்
எண்ணமதில் இளைஞர் அமைப் பொன்றே கொண்டு
எண்திசையும் அவ்வுழைப்பாம் பயணம் கொண்டு
மண்ணில் ஒரு பிடியேனும் மாற்றான் கொண்டால்
மறைந்து குறுகிடும் எங்கள் எல்லை என்று
கண்ணயராச் செங்களங்கள் புலிபோ லாடி
காட்டுகின்ற சுபாஸ் போசாம் மாவைச் செல்வம்
விண்ணுலகில் வாழ் செல்வாத் தெய்வம் கண்ட
வீரன் இளம் தமிழ்ச்சேனை அதிபன் ராசா.

—கிளிநொச்சி ஜெயபாலன்

---

# வந்தனை செய் தமிழ் இனமே!

வீரத் தமிழனுக்கு
வெற்றி நடை போட்டங்கே
ஏறி முழக்கமிட்ட
எழுச்சி மிகு வாசனுக்கு
ஆரத் தமிழுலகம்
அறிய வைத்த மேதைக்கு
ஓராயிரம் வணக்கம்
ஓதலுடன் செலுத்துகின்றேன்.

ஈழத் தமிழினத்தின்
இக் கட்டை உலகறிய
காலத்தைப் பார்த்திருந்து
கர்ச்சித்த மேதைக்கு
வாழும் தமிழனுக்கு
வைகுந்த வாசனுக்கு
வாழ் நாள் முழுவதுமே
வந்தனை செய் தமிழினமே!

—ந. தயாளகுணசிலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் ஈழ நாட்டு விளையாட்டு வீரனுக்கு சிங்கள நாட்டில் நேர்ந்த அவமானம்!

சென்ற வாரம் பம்பலப்பிட்டி சென் பீற்றர்ஸ் கல்லூரிமண்டபம் நிறைந்து வழிகின்றது. ஆம்! அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளில் வெற்றியீட்டிய வீரதிலகங்களுக்கு பரிசளிப்பு விழா!

ஆம்! அது பரிசளிப்பு விழாவா? அல்லது பரிகசிப்பு விழாவா? புரியவில்லை எமக்கு.

பல போட்டிகளிலும் வெற்றியீட்டிய வீர புருசர்கள் நிறைந்த அந்த மண்டபத்தில் ஒரு தமிழ்மாணவன் அதுவும் யாழ்ப்பாணத்தின் பிரபல கல்லூரி என உலக மறிந்த யாழ் இந்துக்கல்லூரி மாணவன் அத்தனை அன்பர்களின் மத்தியிலும் கழுத்தில் பிடித்து தள்ளி வெளியேற்றப்பட்டார்.

ஆம்! விடயம் புரியாது விழிக்கிறீர்களா? யார் இந்த மாணவன்? அகில இலங்கையில் உயரப் பாய்தலில் முதலிடம் பெற்ற வீரத்திலகம்? ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொள்ளுமளவுக்குத் திறமை மிக்க மாணவன்; நாற்புறமும் கடல் சூழ் காரை தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்வன் செ. ராதாகோபாலன் தான் அத்தனை அன்பர்களின் மத்தியிலும் வைத்து பரிகசிக்கப்பட்டார்.

17 வயதுக்குட்பட்டோர் பிரிவில் அகில இலங்கையில் உயரம் பாய்தலில் 5 அடி 6 அங்குலம் பாய்ந்து முதலிடம் பெற்ற இத்தமிழ்மாணவனுக்கு வழங்கப்பட வேண்டிய திறமை அடிப்படையிலான வெற்றிக்கிண்ணம் 19 வயதுக்குட்பட்டோர் பிரிவில் உயரப்பாய்தலில் 5அடி 6 அங்குலம் பாய்ந்து முதலிடம் பெற்ற சென். தோமஸ் கல்லூரியைச் சேர்ந்த சிங்கள் மாணவனுக்கு வழங்கப்பட்டது. செ. ராதாகோபாலனின் பெயர் அழைக்கப்பட்டபோது பலரது காரகோசத்தின் மத்தியில் மேடையில் ஏறிய போது; இந்த சிங்கள சூரப் புலி தன்னை ராதாகோபாலனை மாற்றி திறமை அடிப்படையிலான வெற்றிக்கிண்ணத்தைஅபகரித்துக்கொண்டான்.

விபரம் புரியாது விழித்த எம்மருமைத் தமிழ்ச் சிங்கத்தை ஒரு அன்பர் கழுத்திலே பிடித்து மளமளவென மேடையை விட்டு வெளியேற்றினாராம். இதனைக் கண்ட சிங்கள வீராங்கனைகள் எனக்கூறப்பட்ட கட்டாக் காலிகள் சிங்களத்தில் 'கொரா! கொரா!' (கள்ளா? கள்ளா!) எனக்கூக்குரலிட்டு விசிலடித்து பரிகசித்தனராம். இது குறித்து மண்டபத்திலிருந்த எவரும் கருத்திற் கொள்ளவில்லை.

இதிலே வெட்கப்படக்கூடிய விடயமும் நகைச்சுவையும் என்னவெனில் எம்மருமைத் தமிழ்ச் சிங்கத்தை கழுத்திலேபிடித்துத் தள்ளிய அன்பர் அகில இலங்கை விளையாட்டுச் சங்கப் பிரமுகரும்; முன்னைய விளையாட்டு வீரருமான தமிழ் அன்பரான 'வில்லியம்ஸ்' என்பது குறிப்பிடத்தக்கது. மற்றைய கல்லூரி மாணவர்களுக்கும் இது ஒரு உதாரணமாக இருக்கட்டும்! இது தான் ஜே. ஆரின் தார்மீக யுகம்! —இந்து மாணவர்கள்.

# தமிழனுக்கு இன்று தேவை தனிநாடு!

## இதற்கு மலையகத்தமிழனின் ஆதரவும் தேவை!

தலவாக்கொல்லையில் தர்மலிங்கம் பா. உ,

"தரணியில் தனக்கென ஒரு நாடு இல்லாத தமிழர்களுக்கு, தமிழ் ஈழம் ஒரு காப்புறுதியாகும். எனவே தான் உலகெங்குமுள்ள தமிழர்களின் தார்மீக ஆதரவை நாம் வேண்டி நிற்கின்றோம். மலையகத்தில் வாழுகின்ற தமிழ்பேசும் மக்களும் தங்களின் தார்மீக ஆதரவை தமிழ் ஈழக் கோரிக்கைக்கு கொடுக்க வேண்டுமென இலங்கைத் தொழிலாளர் கழக அரசியற் செயலாளரும் மானிப்பாய் தேசியஅரசுப்பேரவை உறுப்பினருமான திரு. வி. தர்மலிங்கம் தலவாக்கொல்லையில் நடைபெற்ற கருத்தரங்கில் கூறினார்.

கழக துணைத்தலைவர் திரு. மு. எல்லாளன் தலைமையில் நடைபெற்ற மேற்பறு கருத்தரங்கில் அவர் தொடர்ந்து பேசும்போது உலகத்தில் 6கோடி தமிழர்கள் வாழுகின்றனர் ஆனால் தமிழர்களுக்கென ஒரு நாடில்லை. 30 நாடுகளில் வாழ்ந்த தமிழர்கள் தங்களின் தனித்துவத்தை இழந்துவிட்டனர். மூன்று நாடுகளில் மட்டுமே தமிழன் தனித்துவம் இழக்காமல் வாழ்ந்து வருகின்றான். தமிழர்களுக்கென தனிநாடு ஒன்று உலகில் இல்லாததே இதற்கு காரணமாகும். இந்நிலை தொடர்ந்தால் இந்த மூன்று நாடுகளில் உள்ள தமிழர்களின் நிலையும் கேள்விக்குறியே. இலங்கையில் தமிழ் இனம் அழிக்கப்படலாம்.

நாங்கள்எங்களின் கோரிக்கைகளை சமாதானமாக தீர்த்துக் கொள்ளவே விரும்புகின்றோம். அவ்வப்போது இந் நாட்டில் ஆட்சிக்கு வந்த தலைவர்களோடு பேச்சு வார்த்தை நடத்தினோம். ஒப்பந்தங்கள் செய்தோம். பலன் எதுவும்கிடைக்கவில்லை. இதனால் எம்மை நாமே ஆள்வதைத்தவிர வேறு வழியில்லை என்ற முடிவிற்கு வந்துவிட்டோம். சிலர் கூறுவதைப் போல் தமிழ் ஈழக் கோரிக்கை என்பது மறு பரிசிலனை செய்ய வேண்டிய ஒன்றல்ல. அது தமிழ் மக்களின்லட்சியமாக அமைந்துவிட்டது என்று கூறினார்.

திரு. ஈழவேந்தன் பேசும் போது, தனி ஒருவரை நம்பி ஒரு இனத்தின் பிரச்சினையை ஒப்படைக்க முடியாது. தனிமனிதவழிபாடோ தனிமனிதனில் உள்ள நம்பிக்கையோ நமது இனத்தை வாழ வைக்க முடியாது, இதை தமிழ் மக்கள் உணர்ந்து செயல்பட வேண்டும் என்று கூறினார்.

திரு. இ. நாகலிங்கம் உட்பட மற்றும் பலர் உரையாற்றினர்.

# பாராளுமன்றத்திலும் தமிழுக்கு பட்டை நாமமா?

## சபாநாயகருக்கு பண்டிதர் இரத்தினம் கடிதம்

"புதிய அரசியல் அமைப்பில் தமிழை ஒரு தேசிய மொழியாக ஏற்று தமிழுக்கும் போதிய உரிமை கொடுக்கப்பட்டுள்ளதென அரசாங்கம் கூறுகிறது. எனினும் அரசாங்க அலுவலகங்களில் தமிழ் புறக்கணிக்கப்படுவது போலப் பாராளுமன்றத்திலும் தமிழ் புறக்கணிக்கப்படுவது கவலைக்குரியது. தமிழ் புறக்கணிக்கப்பட்டுள்ள பின்வரும் விடயங்களை உங்கள் கவனத்திற்குப், வேண்டிய நடவடிக்கைக்கும் கொண்டு வர விரும்புகின்றேன்.

1. அ. கலாச்சார அலுவல்கள் ஆலோசனைக் குழுவின் செயலாளர் 20-10-78 ஆம் திகதியிட்டு எனக்கு அனுப்பிய குழுக்கூட்ட அறிவித்தல் சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் மட்டுமே உள்ளது. தமிழ் புறக்கணிக்கப்பட்டுள்ளது.

ஆ. அதனுடன் இணைக்கப்பட்டுள்ள குறிப்புக்கள் சிங்களத்தில்மட்டுமே உள்ளன. இதனைப் படித்து அறிய முடியாத எனக்கு இதனை அனுப்புவதும். தமிழில் அனுப்பாமல் விடுவதும் என்னைச் சிறுமைப்படுத்தும் செயலாகி என் உள்ளத்தை உறுத்துகிறது.

2. பாராளுமன்ற அன்சாட் தொகுதி 1, இல் 6, நிரல் 319. 320 பார்க்குக. நீங்கள் ஆலோசனைச் சபைகள் பற்றி செய்த அறிவிப்பில் ஆலோசனைச் சபை உறுப்பினர்களின் பட்டியல்கள் சிங்களத்திலும். ஆங்கிலத்திலும் மட்டுமே உள்ளன தமிழில் இல்லை.

3. பாராளுமன்ற வளவில் நுழைவாசல்களை அடுத்துள்ள சுவர்களில் பொறிக்கப்பட்டுள்ள அறிவிப்புக்கள் தனிச்சிங்களத்திலேயே உள்ளன. இதனைச் சுட்டிக் காட்டித் தமிழையும் சேர்க்குமாறு தேசிய அரசுப் பேரவையில் கேட்டிருந்தேன். நடவடிக்கை எடுப்பதாகப் படைக்கல சேவிதர் எனக்குக் கூறினர். ஆனால் இன்னும் ஒன்றும் நடைபெறவில்லை.

இவ்வாறு காவலூர் பா. உ. பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்கள் சபாநாயகர் அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

# தந்தை செல்வாவின் நிலைக்கு தலைவர் அமிர் உயரவேண்டும்

கூட்டணியினர் மாவட்ட மந்திரி பதவிகளை ஏற்பது பற்றி பத்திரிகைகளில் வெளிவரும் செய்திகளைக் குறிப்பிட்டு எழுதுகிறேன்.

விடாப்பிடியாகத்தொடர்ந்து காட்டிய எதிர்ப்பினாலும், ஒத்துழையாமை நடவடிக்கைகளினாலும் இன்று அரசாங்கம் தமிழனைத் தேடி வருகிறது. இந்த நேரத்தில் நாங்கள் கதைக்க வேண்டியது ஒரே ஒரு விடயமே, அதாவது அரசாங்கம் தமிழினத்திற்கு எவ்வளவு சுயநிர்ணய உரிமை கொடுக்கப் போகிறது என்பதே. எல்லா விபரங்களும் அதாவது குடியேற்ற விடயத்திலோ, வேலை வாய்ப்பிலோ, அபிவிருத்தித்திட்டங்களிலோ— எங்களுக்கு எவ்வளவு அதிகாரம் கொடுக்கப் போகிறது என்பதே; எங்கள் பிரதிநிதிகள் தாங்கள் விரும்பியதைச்செய்யஎவ்வாறுசுதந்திரம் உண்டு என்பதே;

தனிநாடு வேண்டும் என்று [illegible] இதைக் குழப்ப இடையில் அதை இதைக்கடிக்க வேண்டாம். எங்களுக்கு எவ்வளவு சுயநிர்ணய உரிமை தரப் போகிறீர்கள் என்பதே கேள்வி. இதைப்பகிரங்கமாகக் கேளுங்கள் அப்பொழுது தான் நாங்கள் தபால்கந்தோருக்கும் பாலங்களுக்கும், உத்தியோகங்களுக்கும் வர்த்தகப் பெருக்கத்திற்குமல்ல; சுதந்திரத்திற்குப் போராடுகிறோம் என்பதை இந் நாட்டு மக்களும் மற்றவர்களும் அறிவார்கள்.

தந்தை செல்வாவைப் போல, தலைவர்கள்மற்றவர்களின் ஐயத்திற்கு இடம் கொடாமல் தம்மைத் தாம் நடத்த வேண்டும். எல்லாத் தலைவர்களுக்கும் இது முடியாவிட்டாலும், அமிர் அண்ணாவுக்கு இது முக்கியம். ஏனெனில் சிங்களவர்கள், அவர்தான் தமிழ தலைவன் என்று கருதுகிறார்கள். எனவே அவர் செல்வநாயகம் வகித்த இடத்தை அடைய வேண்டும்.

வேலை தேடி, வேலை மாற்றம் எடுத்துக்கொடுத்து, உயர் பதவி பெற்றுக் கொடுத்தல் வியாபார சலுகைகள் பெற்றுக் கொடுத்தல் இப்படியான வேலைகளை விட்டு கொள்கை விடயமாக மட்டுமே அவர் பாடுபட வேண்டும். இந்தப் பொறுப்புக்களை அவரில் சுமத்தாது அவரைச் சுதந்திரமாக இயங்க விட வேண்டும்.

இந்தச் சலுகைகளுக்காக மந்திரிகளிடம் செல்வதால் இந்தத் தலைவனும் அவர்களோடு நயமாய் நடக்க வேண்டி வரும். அவருக்கு முழு மூச்சாய் எதிர்க்கும் சக்தி குறையும். தலைவன் மாற்றருக்கும் கடமைப்படுவான். அதிகாரம் உள்ளவர்கள் இதைப் பயன்படுத்தி எங்கள் பலத்தைத் உடைத்து விடுவார்கள்.

அமிர் இனிமேல் வேலை எடுத்துக் கொடுக்க மாட்டார், வேலை மாற்றம் பெற்றுக் கொடுக்க மாட்டார்

—4-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலை இயக்கம் தலை நிமிரட்டும்! கெடுமதியாளர் விலகியோடட்டும்!!

அன்பு நண்பா,

இது நமக்கோர் சோதனை காலம்— நமது விடுதலை இயக்கத்துக்கோர் சோதனை காலம்! முப்பதாண்டுகளாக மூதறிஞர் செல்வாவின் வழிகாட்டுதலின் கீழ்—தடைபல தாண்டி—இடுக்கண் பல ஏற்று — கண்ணீரும் செந்நீரும் கொட்டி—உயிர்ப்பலிகள் பலதந்து—இலட்சியப்பாதையிலே தட்டுத்தடங்கலின்றி தலை நிமிர்ந்து வந்த நமது இயக்கத்துக்கு இஃது ஓர் சோதனை காலம்! 400ஆண்டுகளாக அடிமைச் சேற்றுள் புரளும் தமிழீழச் சமுதாயத்தின் அடிமை விலங்கொடித்திட ஆர்த்தெழுந்து போர் முரசொலித்து நிற்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியை சின்னாபின்னப் படுத்திட—தமிழீழ மக்களை கிழக்கென்றும், வடக்கென்றும் மீண்டும் பிரித்திட—எத்தனை சதிகள். எத்தனை சூழ்ச்சிகள்!

'பச்சைப்'பாம்பு படமெடுத்தாடத் தொடங்கி விட்டது; யூ. என். பி. ஆட்சி தனது வழமையான சகுனி விளையாட்டை ஆரம்பித்து விட்டது; பலவீனமான உள்ளங்களுக்கு—நக்குண்டு நாவிழந்த நிலையிலிருப்போர்க்கு — ஆசை வலை வீசப்பட்டுள்ளது; அந்த வலையிற் சிக்கி, விடுதலை இயக்கத்தின் முதுகில் குத்தக்கூடியவர்களை சிங்கள ஏகாதிபத்தியம் நன்கு அடையாளம் கண்டுகொண்டு — அவர்களை புதிய எட்டப்பர்களாக்கி இயக்கத்தை பலவீனப் படுத்தி கூறுபோட்டு விடலாம் என்று கனவு காணுகிறது. தமிழினத்தின் வரலாற்றில் தந்தை செல்வா உருவாக்கிய இந்தத் தூய்மையான விடுதலை இயக்கத்தையும் இலட்சியத்தையும் காப்பாற்றுவதற்காக துணிகரமாகவும், உறுதியுடனும் தமிழர் விடுதலைக் கூட்டணி சில முடிவுகளை தாமதமின்றி எடுத்தே தீர வேண்டிய நிலைக்கு இன்று தள்ளப்பட்டுள்ளதென்பதை எவரும் மறுத்திட முடியாது.

தமிழ் ஈழம் என்ற புனிதமான கொள்கையின் அடிப்படையில் இயங்கும இந்த விடுதலை இயக்கத்தில் தம்மை இணைத்துக்கொண்டதனுல்—கூட்டணியிலுள்ளவர்கள் மக்கள் மத்தியில் மதிப்பும் செல்வாக்கும் பெற்றுர்களே தவிர—அவர்களுக்கு கிடைத்துள்ள பெருமையும் கௌரவமும் பாராளுமன்றப்பதவியும் இயக்கத்தினுல் தான் அவர்களுக்குக் கிடைத்ததே தவிர — எவருடையவும் தனிப்பட்ட செல்வாக்கினுல் அல்ல; எனவே இயக்கத்துக்கும் இலட்சியத்துக்கும் துரோகம் செய்யும் அல்லது துரோகம் செய்ய நினைக்கும் யாராவது இயக்கத்திலிருந்து தூக்கியெறியப் படுவார்களானுல்—அவர்கள் தமிழ் மக்களின் உள்ளத்திலிருந்தும் உடனடியாக தூக்கியெறியப்பட்டு விடுவார்கள்! விடுதலை உணர்வு பொங்கிப்பிரவாகிக்கும் தமிழ் மக்களிடையே அப்படிப்பட்டவர்கள் பின்னர் வெறும் செல்லாக்காசுகள் தாம்!

தலையினிழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையினி ழிந்தக் கடை

என்று வள்ளுவன் கூறியதுபோன்று இலட்சியத்திலிருந்து — தமது நிலையிலிருந்து — மாறுபடுவோர் யாராக இருந்தாலும் வெட்டிக் கழிக்கப்பட்ட மயிராக சமுதாயத்திலிருந்து ஒதுக்கப்பட்டுவிடுவார்கள். இந்த அளவுக்கு இந்த நாட்டுத் தமிழ் மக்களை மூதறிஞர் தந்தை செல்வா அவர்கள் இலட்சியவாதிகளாக ஆக்கிவைத்திருக்கிருர்-கொள்கைத் தங்கங்களாக மாற்றிவைத்திருக்கிருர்; மக்களை நம்பியே தந்தை செல்வா இந்த இயக்கத்தை உருவாக்கினுரே தவிர—தனிப்பட்ட மனிதர்களை நம்பி அல்ல!

கடந்த தேர்தலில் கூட்டணி சார்பில் வேட்பாளர்களாக போட்டியிட்டவர்களுக்கு தமிழ் மக்கள் மகோன்னதமான வெற்றியைச் சேர்த்தார்கள் என்ருல்—அது அந்தந்த வேட்பாளர்களின் தனிப்பட்ட தகுதி கண்டோ—திறமை கண்டோ — குணுதிசயத்தினுலோ—அல்ல; இயக்கம் ஒன்றுக்காகவே—தமிழ்ஈழக் கொள்கை ஒன்றுக்காகவே — மக்கள் கூட்டணிக்கு வாக்களித்தார்கள்; எனவே யாராவது கூட்டணியில் வெற்றிபெற்ற பா. உக்கள் இன்று தடுமாறுகிருர்கள்— ஆளுங்கட்சியின் ஆலவட்டத்திலே மயங்குகிருர்கள் என்ருல்—அதற்குப் பதில் சொல்ல வேண்டியது—அத்தகைய பலகீனர்களை—இலட்சிய உறுதியற்றவர்களை வேட்பாளர்களாக தேர்ந்தெடுத்து மக்கள் முன்னிறுத்திய கூட்டணியே தவிர—அதற்கு மக்கள் எந்த விதத்திலும் ஜவாப்தாரியல்லர்! பாத்திரவாதிகள் அல்லர்!

1977 ஆடிப்பொதுத்தேர்தலில் தமிழ் மக்கள் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு வாக்களித்தது—சிங்கள அரசாங்கத்துடன் ஒத்துழைப்பதற்காக அல்ல—சிங்கள ஏகாதிபத்தியத்தை விரட்டியடித்து; தமிழீழ அரசை நிறுவுவதற்கு உழைப்பதற்காகவே! அந்த ஒன்றுக்காகவே தமிழ் மக்கள் கூட்டணிக்கு—உதய சூரியனுக்கு—வாக்களித்தார்கள்!

சிங்கள ஆட்சிக்கு இனத்தைக்காட்டிக் கொடுத்துக்கொண்டு தமிழ் இளைஞர்களுக்கு

## அரசியல் மடல்

அற்ப உத்தியோக சலுகை காட்டிய குமார சூரியரை, அருளம்பலத்தை வடக்கிலே தோற்கடித்தார்கள்—சிங்கள அரசுடன் உறவாடிக் கொண்டு மட்டக்களப்பின் 'அபிவிருத்தி'பற்றிப் பேசிய ராஜன் செல்வநாயகத்தை தோற்கடித்தார்கள்—பதவியும், உத்தியோகமும், பாலமும் பள்ளிக்கூடமும், தபாற் கந்தோருமல்ல நமக்கு முதல் தேவை—தமிழ் ஈழத்தின் விடுதலையொன்றே தேவை—என்ற இலட்சியத்தை முன்வைத்த கூட்டணியையே மக்கள் தேர்ந்தெடுத்தார்கள்—தமிழ் மக்களின் அசையாத உறுதியை, நிலையான இலட்சியத்தை இது எடுத்துக்காட்டுகிறது!

**தமிழ மக்கள் எப்போதும் சரியாகத்தான் சிந்திக்கிருர்கள் — செயற்படுகிருர்கள் — விடுதலை இலட்சியத்தை கட்டிக்காத்துவருகிருர்கள் — ஆனுல் தலைவர்கள்தான் அடிக்கடி தடுமாறி பதவி ஆசைகளில் வீழ்ந்து இலட்சியத்தையும் இயக்கத்தையும் பாழடிக்கிருர்கள். இதுதான் தமிழினத்தின் வேதனைக்குரிய கடந்தகாலச் சரித்திரம்— இந்தச் சரித்திரம் மறுபடியும் திரும்பப்போகிறதா? என்கிறகேள்வியே நம்நெஞ்சை அரிக்கிறது!**

அன்று ஒற்றையாட்சி அரசிலமைப்பை எதிர்த்து—தமிழ் தேசிய இனத்துக்கு சுயநிர்ணய உரிமை கோரி வாதாடுவதற்காக அமரர் ஜீ. ஜீ. பொன்னம்பலம் லண்டனுக்கு சென்றிருந்த சமயத்தில்—இங்கு யூ.என்.பி,யின் பிதாமகர் டி. எஸ். போட்ட வலையில் வீழ்ந்து ஒற்றையாட்சி அரசியலமைப்பை ஆதரித்துக் கைதூக்கி தமிழினத்தினதும், தலைவர் ஜீ. ஜீ. யினதும், முதுகிலே குத்தினுன் இராசகுலேந்திரன் என்று ஒரு இனத்துரோகி; இன்றும், தமிழினத்தலைவர் அமிர்தலிங்கம் அவர்கள் வெளிநாடுகளில் தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்குஆதரவுதிரட்டிவரும்வேளையில்—இங்கும் வெளிநாடுகளிலும் தலைவருக்கு முகத்தில் கரிபூசவும், தமிழினத்தின் முதுகிலே குத்தவும் ஒரு சிலரை யூ.என்.பி. அரசாங்கம் தனது கையாட்களாகப் பயன்படுத்துகிறதா?

"பாராளுமன்றத்தை நமது விடுதலைப் போராட்டத்துக்கு ஒரு களமாகப் பயன்படுத்துகிற அந்த அளவுக்கு மட்டுமே நாம் புதிய அரசியலமைப்பை செய்ற்படுத்த உதவுவோம்; வேறு எந்த வழியிலும் அரசுக்கு ஒத்துழைப்பு வழங்கமாட்டோம்; தமிழ்ஈழ விடுதலைக்கே போராடுவோம்;" என்று லண்டன் பி.பி.சியில் முழங்குகிருர் அமிர் அண்ணன்.

"சிறிமா ஆட்சியின்கிழ் தமிழருக்கிருந்த பாதுகாப்புக்கூட ஜே. ஆர். ஆட்சியில் இல்லை; வெளிநாட்டு உதவிகளைக்கொண்டு தமிழர் தாயகத்தில் சிங்களவரைக் குடியேற்றி இனக்கொலை நடத்துகிறது ஜே. ஆர். ஆட்சி—இதை எதிர்த்துப் போராடத் தமிழ்க்குலம் தயாராக இருக்கிறது" என்று அமெரிக்க செய்தியாளர்களுக்கு மிடுக்குடன் கூறுகிருர் அண்ணன் அமிர்தலிங்கம்!

இங்கோ சிங்கள ஆட்சியாளருடன் நம்மவர்கள் ஒரு சிலர் ஒத்துழைப்பு பல்லவி பாடுகிருர்கள்; சிங்களப் பிரதமருக்கு வரவேற்பு அளிக்கிருர்கள்—மாலை சூட்டுகிருர்கள்; இன்னும் நம்மை 'சிறுபான்மை இனம்' என்று தாழ்த்திக் குறிப்பிடுகிருர்கள். மண்ணைக்காத்திடக் கூட்டணியிடம் திட்டம் இல்லையென்று மாற்ருனின் பத்திரிகைக்கு அறிக்கை விடுகிருர்கள்— எதிரிக்கு முன்னுல் நின்று கொண்டு தமிழீழம் அமைப்பதற்கு இளைஞர்களிடம் திட்டம் உண்டா என்று கேட்கிருர்கள்;ஜே.ஆர். ஜெயவர்த்தனுவோ இந்தியாவில் நின்றுகொண்டு, கூட்டணி பா.உக்கள் சிலர் அரசாங்கத்துடன் சேர விருப்பம் தெரிவித்துள்ளதாக மார் தட்டுகிருர்.

இத்தகைய குழப்பங்களுக்கும், கொள்கைத் தெளிவற்ற தன்மைக்கும் கூட்டணி ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டிய தருணம் நெருங்கி விட்டது. கட்டுப்பாடு காப்பாற்றப் படா விட்டால்— கொள்கை காப்பாற்றப் படா விட்டால்— கூட்டணி மீது மக்களுக்கு அவ நம்பிக்கையும் விரக்தியும் ஏற்பட்டுவிடும்!

தமிழ்ச் சமுதாயத்தின் கௌரவத்தையும் உறுதியையும் விடுதலை உணர்ச்சியையும், தன்மானத்தையும், ஒற்றுமையையும் பாதுகாக்க வேண்டிய பாரிய பொறுப்பு இன்று கூட்டணியிடமே உண்டு என்பதை உணர்ந்து கூட்டணித் தலைமை தனது பொறுப்புக்களை தயவு தாட்சண்யமின்றி நிறைவேற்ற வேண்டும்!

கொள்கையுறுதியற்றவர்கள்— சபலபுத்தி படைத்தவர்கள்— மாற்ருனுக்கு முதுகுசொறிபவர்கள்— இயக்கத்தின் முதுகிலே குத்துபவர்கள்— நக்குண்டு நாவிழந்த நிலையினர்— ஆற்றிலொரு காலும் சேற்றிலொரு காலும் வைத்திருப்பவர்கள்— காட்டாற்றை எதிர்கொள்ள அஞ்சி, தங்குமடம் நாடி ஓடுபவர்கள்— நிழல்தேடி ஒதுங்குபவர்கள்— இப்படிப்பட்டோர் ஓர் இயக்கத்தில் ஆயிரம்பேர்இருப்பதை விட — கொள்கையுறுதியும், விசுவாசமும், கலங்காத சித்தமும், எதையும்தாங்கும் இதயமும், இலட்சியத்துக்காக துன்பங்களை எதிர்கொள்ளும் துணிவும்தன்னம்பிக்கையும், தியாக உள்ளமும் நிறைந்த நூறுபேர் ஒரு விடுதலை இயக்கத்தில் இருந்தாலே போதும்— விடுதலை நாள் விரைந்து வரும்!! இதை மனதில் கொண்டு கூட்டணித் தலைமை இயக்கத்தைப் புனிதப்படுத்துமாக.

உன் அன்புத்தோழன்

கோவை-மகேசன்

—3-ம் பக்கத்தொடர்

வியாபாரத்தைப் பெருக்க குறிப்பிட்ட சிலருக்கு சலுகைகள் பெற்றுக் கொடுக்க மாட்டார். அவர் கொள்கை விடயங்களில் மட்டுமே ஈடுபடுவார். இப்படியொரு நிலைமை உருவாகினுல் சுயநலமிகள் அவரிடமிருந்து ஒதுங்கியும் இலட்சியவாதிகள் அவரை நெருங்கியும் வாழும் நிலை ஏற்படும்.

அமிர் அண்ணு தந்தையைப் போல் தன்னுடைய புகழையும் தமிழினத்தின் புகழையும் நிலைக்கச் செய்ய முடியும். இதெல்லாம் அரசியலில் சாத்தியமில்லை என்று சொல்லவேண்டாம். தந்தை செய்து காட்டி விட்டார். சுதந்திரப் போராட்டத்திற்குப் பலமான தலைமையிலும் பார்க்க தூய்மையான, நேர்மையான தலைமைவேண்டும். இதைச் செய்யா விட்டால் தமிழனின் இலட்சி[illegible] நிச்சயமாகத் தமிழ் தலைவர்கள் போட்டடிப்பார்கள்.

பிறகு கையை உதறிக் கொண்டு கடையில் போய் வாங்கும் விடயமல்ல.

இதைவிட இன்னுமொரு விடயம் 35- வயதுக்கு மேற்பட்டவர்களே இதுவரை நடந்த அரசியலை தெரிந்திருக்கிருர்கள். இப்பொழுது வளரும் இளைஞர்களுக்காக கடந்த கால அரசியலை யொட்டி சில மடல்களை [illegible] [illegible] வரைய வேண்டும்.

—நல்லம்மா.

## பயிற்சியாளர் தேவை

தமிழ் புறூவ்ரீடிங்— சேர்க்குலேஷன் வேலைக்குப் பயிற்சியாளர் ஒருவர் தேவை விண்ணப்பிக்கவும்.
விளம்பரம் மே/பா சுதந்திரன் 15, மகாத்மா காந்தி வீதி யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் மகாத்மாகாந்தி வீதி 15ம் இலக்கத்திலுள்ள சுதந்திரன் அச்சகத்தில் 1978ம் ஆண்டு நவம்பர் மாதம் 1ம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org